[1972 ஆகஸ்ட் 18

கீழ் வழக்குத் தொடர்ந்து நிலுவையில் உள்ளது. மேற்படி ஆலயத்திற்குப் புதிதாக நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக இதுவரை ரூ. 500 நன்கொடை சேர்ந்துள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, குடிவெறியன் கோவில் சிலைகளைச் சேதப்படுத்தும்வரை கோவிலில் இருந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள்? அப்படிப்பட்ட அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா? மேலும் இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அறநிலையத் துறை என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அறநிலையத்துறை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, சேதமுற்ற கோயில் அறநிலையத்துறையைச் சேர்ந்தது அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கைகள் அளித்தல்.

(அ) கடையநல்லூர் இரயில் நிலையத்தில் இரு இரயில் வண்டிகள் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் 82-வது விதியின்கீழ் இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையொன்றை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, 16-8-72 புதன்கிழமை அதிகாலை 2 மணி அளவில் தென் பிராந்திய ரயில்வேயில் விருதுநகர்-தென்காசி மீட்டர்கேஜ் இருப்புப் பாதையிலுள்ள கடையநல்லூர் இரயில் நிலையத்தில் திருவனந்தபுரம்-சென்னை விரைவு இரயில் வண்டியும், சென்னை-திருவனந்தபுரம் பாசஞ்சர் வண்டியும் மோதிக்கொண்டன என்ற தகவலைக் கேட்டு வருத்தத்தில் ஆழ்ந்துள்ளோம். இந்த விபத்தின் காரணமாக 6 பேர் கடுமையான காயமடைந்தனர்; 4 பேர் சிறு காயமடைந்

தனர். மேலும் 41 பயணிகளுக்கு இரயில் நிலையத்திலும் 3 பேருக்கு உள்ளூர் அரசு மருத்துவமனையிலும் முதலுதவி அளிக்கப்பட்டது. கடுமையான காயமடைந்தவர்கள், சிறு காயமடைந்தவர்கள் அனைவரும் கடையநல்லூரிலுள்ள அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர், மேற் கொண்டும் சிகிச்சை அளிப்பதற்காகத் திருநெல்வேலி அரசு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சிகிச்சைக்குப் பின் இப்போது இருவர் மருத்துவ மனையிலிருந்து திரும்பினர்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை சூபரண்டுடனும், மாவட்ட வருவாய் அதிகாரியுடனும் விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு தேவையான உதவியை நல்கிட அதிகாரிகளுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தார். அவருடைய உத்தரவின் பேரில், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து 30 பேர்கள் கொண்ட மருத்துவக் குழு ஒன்று இடத்திற்கு விரைந்து சென்று காயமுற்றவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தது. காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்த்து, அவர்களுக்கு முதல் அமைச்சரின் ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவித்தார். விபத்து ஏற்பட்டதால் பயணம் தடைப் பட்ட பயணிகளைக் காவலர் வண்டிகளில் தென்காசி ரயில்வே நிலையத்திற்கு அனுப்பவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விபத்துப் பற்றித் தகவல் கிடைத்தவுடன், மருத்துவர்களுடன் கூடிய நிவாரணச் சிறப்பு இரயில் வண்டிகள் விபத்து நடந்த இடத்திற்கு மதுரை, செங்கோட்டை, கொல்லம் ஆகிய இடங்களி லிருந்து விரைந்து அனுப்பி வைக்கப்பட்டன. உற்றுழிச் சிறப்பு இரயில் வண்டிகள் (பிரேக் டவுன் ஸ்பெஷல்ஸ்) மதுரையி லிருந்தும் செங்கோட்டையிலிருந்தும் அனுப்பி வைக்கப்பட்டன. தென் பிராந்திய இரயில்வேயின் மூத்த அதிகாரிகள் சென்னையி லுள்ள தலைமை இடத்திலிருந்து விபத்து நடந்த இடத்திற்கு விமானத்தில் விரைந்தனர். மதுரை இரயில்வே கோட்டக் கண் காணிப்பாளரும், மதுரை கோட்டத்திலுள்ள கோட்ட அதிகாரி களும் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர். விபத் தில் காயமடைந்த உள்ளூர் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப் பட்ட 10 பேர் ஒவ்வொருவருக்கும் இரயில்வே அதிகாரிகள் கருணைக் கொடையாக ரூ. 200 வழங்கினர்.

கீழே பெயர் குறிப்பிட்டுள்ளவர்கள் கடையநல்லூர், திருநெல்வேலி மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் :—

கடையநல்லூர் மருத்துவ மனை :

1. திரு. ஆசிர்வாதம், பண்டகக் கிடங்குக் காப்பாளர், இரயில்வே, கொல்லம்.

2. திரு. சண்முகம், எரியூட்டுபவர் (பயர்மென்), இரயில்வே, மதுரை.

3. திரு. முத்தையா, பயணி.

திருநெல்வேலி மருத்துவ மனை.

1. திரு. பி. பெருமாள், 109-ஆம் எண், இரயில் வண்டியின் வலவர்.

2. திரு. சிவசங்கரன், அடையாள விளக்கு காட்டுபவர், இரயில்வே, திருநெல்வேலி.

3. திரு. ஸ்டீபென்சன், 133-ஆம் எண், இரயில் வண்டியின் வலவர்.

4. திரு. காசிம், இ.எல்.ஆர். காங்கியாள், இரயில்வே.

விபத்துக்குள்ளான இரண்டு இரயில் வண்டிகளிலும் பயணம் செய்தவர்களை அவரவர்கள் போய்ச் சேர வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பங்களூர் இரயில்வே உதவி ஆணையாளர் இந்த இரயில் விபத்து குறித்து செங்கோட்டையில் 18-8-1972 பகல் 11 மணி முதல் விசாரணை நடத்துகிறார்.

(3) 1972-73 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை— அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1972-73-ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதி நிலை அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை யொன்றும் இம் மன்றத்தின்